1979 மார்ச் 7]

பயிர்களைப் பாதுகாக்க இதை பெஸ்டிசைட்ஸ் கண்ட்ரோல் ஸ்பெஷல் டீம் என்ற அளவுக்கு, எப்படி மனிதனுக்கு நோய் வந்தால் ஆராய்ச்சிப் பிரிவு ஏற்படுத்துகிறோமோ அப்படி அகில வோர்ல்டு ஹெல்த் ஆர்கனைசேஷன் என்ற முறையிலே இந்த நோய்களைத் தடுக்க உடனடியாக பரிசீலனை செய்து, பயிர்களை நோய்களினின்றும் காக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முடிக்கொத்து நோயின் பிடியிலிருந்து பயிர்களைக் காக்க அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது. இந்த நோயைக் கட்டுப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் 'இண்டியன் கவுன்சில் ஆஃப் அக்ரிகல்சுரல் ரிசர்ச்' என்ற நிறுவனத்திடம்—அது டெல்லியிலுள்ள அக்ரிகல்சுரல் நிறுவனம், இதுபற்றி அங்கு கேள்வி கேட்டு அனுப்பியிருக்கிறோம். உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர்களைக் கேட்டிருக்கிறோம். அதனால் இந்த நோயைத் தடுக்க எல்லாவித தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கூட்டுறவுகளின் உரங்களின் விலை.

*வினா எண் 258—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாய கூட்டுறவு கடன் சங்கங்களில் கொடுக்கப்படுகின்ற உரங்களின் விலையைவிட தனியார் துறையில் கொடுக்கின்ற உரங்களின் விலை குறைவாக இருக்க காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையமும் மட்டுமே அரசு வழி உரங்களை, அரசு நிர்ணயம் செய்த விலையில் விநியோகம் செய்து வருகின்றன. இவ்வுரங்கள் தனியார் மூலம் விற்பனை செய்யப்படுவதில்லை. ஆகவே அரசு வழி உரங்களைப் பொறுத்தவரையில் வினாவிற்கு இடமில்லை.

அரசு வழி அல்லாத உரங்களை தனியார் வியாபாரிகளும், கூட்டுறவு விற்பனை இணையங்களும் விற்பனை செய்கின்றனர். என்ன விலைக்கு விவசாயிக்கு உரத்தை விற்பனை செய்ய வேண்டும் என்று உற்பத்தியாளர் நிர்ணயித்த

[1979 மார்ச் 7

போதிலும், தனியார் வியாபாரிகள் தங்களிடமுள்ள உரங்களின் கையிருப்பு, சந்தையில் இத்தகைய உரங்கள் கிடைக்கின்ற அளவு மற்றும் அவ்வுரங்களுக்கு இருக்கும் கிராக்கி ஆகியவற்றைக் கணக்கிட்டு தங்களிடமுள்ள உரங்களை, உற்பத்தியாளர் நிர்ணயித்த விலையிலிருந்து அதிகமாகவோ அல்லது குறைத்தோ விற்பனை செய்கின்றனர். ஆனால் கூட்டுறவு சங்கங்கள் இத்தகைய காரணங்களையெல்லாம் கருதாமல், உர உற்பத்தியாளர் நிர்ணயித்த விலைக்கே உரத்தை விற்பனை செய்கின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பான விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கொடுக்கப்படுகின்ற உரங்களின் விலையை விட தனியார் கடைகளில் கொடுக்கப்படுகின்ற விலை குறைவாக இருப்பது மட்டும் அல்லாமல், தரமாகவும் இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? அந்தத் தனியார் கடைகளில் விற்கப்படும் விலையின் அளவிற்காவது கூட்டுறவுத் துறை கடைகளில் விற்பதற்கு அரசு ஆவன செய்யுமா? தனியார் கடைகளில் கிடைக்கும் தரமுள்ள வகைகளில் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 9–10]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றையதினம் கூட்டுறவு இணையத்தின் சார்பாக கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக விற்பனை செய்யும் உரங்கள் தரமான, கலப்படம் அற்ற உரம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, அவர்கள் விலையைப் பற்றிச் சொன்னார்கள். தனிப்பட்ட வியாபாரிகள் லாப நோக்கத்தோடு, அவர்களுக்கு இருக்கின்ற லாபத்தைக் குறைத்துக்கொண்டு சில இடங்களில் விற்கிறார்கள். ஆனால் கூட்டுறவு இணையம் அப்படிச் செய்ய முடியாது. ஆனாலும் இன்றைய தினம் அரசு அத்தனை மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய இந்த வினாவை ஒட்டி ஒரு ஆய்வு செய்து உர விற்பனையில் கூட்டுறவு சங்கங்களுக்கு கிடைக்கும் லாபம், விளம்பரம், நடப்பு செலவுக்கு மட்டுமே போதுமான அளவிற்கு இருப்பதால் குறைந்த விலையில் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்ய இயலவில்லை. தற்போது தனிப்பட்ட வியாபாரிகள் உரவிற்பனை செய்யும் இடங்களில் இருந்தும் கூட்டுறவு விவசாயச் சங்கங்கள், மத்திய கூட்டுறவு வங்கியின் கடனைப் பெற்று கூட்டுறவு இணையத்தின் மூலம் விற்க கொள்முதல் செய்ய அனுமதிக்கப்

1979 மார்ச் 7]

படுகிறது. ஆகவே, இச்சங்கங்கள் தேவை ஏற்படின் அரசு வழி அல்லாத முறையில் உரங்களை கொள்முதல் செய்து, தனிப்பட்ட வியாபாரிகள் விலைக்கு போட்டிபோட்டு விற்கமுடியும். அப்போது ஓரளவு தனிப்பட்ட வியாபாரிகளையும் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தமுடியும் என்று கருதுகிறேன்.

திரு. துரை கோவிந்தராசன்: தலைவரவர்களே, தனியார் நடத்தும் உரக் கடைகளில் விற்கப்படும் உரங்கள், கூட்டுறவு சங்கங்களில் விற்கப்படும் உரங்களை விட தரம் குறைந்து, கலப்படமாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிலையைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியார்கள் உரங்களைக் குறைந்த விலையில் விற்பதற்கு உள்ள காரணங்களில் இதுவும் ஒன்று. அவர்கள் தரம் அற்ற பொருள்களை விற்பதால்தான் இந்த குறைந்த விலையில் அவர்களால் சந்தையில் உரத்தை விற்க முடிகிறது. அரசு அப்படிப்பட்ட தரம் இல்லாத உரங்களை விற்கும் வியாபாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இங்கே கேட்கப்பட்ட கேள்வி தனியார் கடைகளில் விற்கும் உர விலை நம்முடைய கூட்டுறவு சங்கங்களில் விற்கும் விலையை விட அதிகமாக இருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் கூட ஒப்புக் கொண்டார்கள். கூட்டுறவு சங்கங்கள் லாபம் அதிகம் வைத்து விற்கவேண்டும் என்று சொன்னதன் காரணமாகத்தான் தனியார் விலையைக் குறைத்து விற்கிறார்கள். அதை உடனடியாக குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்போது தரமான உரம் தேவைப்படுகிறது. ஆகவே, அரசாங்கம் மானியமாக கொஞ்சம் பணம் விவசாயிகளுக்கு உரம் வாங்கக் கொடுக்கலாம். அது மட்டுமல்லாமல், கூட்டுறவு சங்கங்களில் லாபம் அதிகம் வைக்காமல், தனியார் விலையை விட 2 சதவீதம் அல்லது 5 சதவீதம் குறைத்து விற்க நடவடிக்கை உரிய காலத்தில் எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினரின் மேலான யோசனையை நிச்சயமாக இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலிலேயே சொல்லும்போது கூட்டுறவு சங்கங்கள் கொடுக்கின்ற உரங்கள் கலப்படம்

அற்றதாக் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். ஆளும் கட்சி கொறடா அவர்கள் அத்தகைய கேள்வி எழுப்பினார்கள். அமைச்சர் அவர்களின் கூற்றின்படி தனியார் விற்கும் உரங்கள் கலப்பட உரங்கள் என அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டு இருக்கிறார் அல்லது அறிந்துகொண்டு இருக்கிறார். ஆகவே, அத்தகைய கலப்படம் செய்து உரங்களை விற்பனை செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தால் எத்தனை பேர்மேல் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி நியாயமான கேள்வி. அருள்கூர்ந்து அவர்கள் தனிக் கேள்வி போட்டால் யார் யார் தவறு செய்தார்கள், யார் யார் மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறோம் என்பதை நிச்சயமாக நான் மன்றத்தில் தெரிவிக்க முடியும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் ஜப்பான் உரம் என்று ஜப்பான் சாக்குகளில் போலி உரங்களை விற்கிறார்கள். அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெளிவான தகவல் தந்தால் அதற்கு உடனடியாக தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, இந்த கூட்டுறவுச் சங்கங்களிலே நாம் கடன் கொடுக்கும்போது 3-ல் 1 பகுதியை உரமாக கொடுக்கிறோம். தேவை இல்லாத நேரத்தில் அந்தமாதிரி கடன் கொடுக்கும் நேரத்தில் 3-ல் 1 பங்கு உரம் கொடுக்கப்படுகிறது. அவர்களும் அதை வாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படி அவர்கள் பெறும் உரத்தை—உரம் தேவையில்லாத போது வாங்குகிற நேரத்தில்—வியாபாரிகளுக்கு 10 ரூபாய் குறைத்து விற்று விடுகிறார்கள். அதனால் தனியார்கள் மார்க்கட் விலையை விட குறைவான விலைக்கு உரம் விற்க முடிகிறது. ஆகவே, கடன் வாங்கும்போது கட்டாயமாகக் கொடுக்கும் 3-ல் 1 பகுதி உரத்தைக் கொடுக்காமல் இருக்க அரசு உரிய ஏற்பாடுகள் செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, கட்டாயமாக உரங்களை விவசாயிகளுக்கு கொடுக்கின்ற காரணத் தால் பெரும்பாலான விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள் என் பதுதான் இந்த அரசின் அனுபவம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.